[Sri K. S. Subramania Gounder] [28th April 1960

திட்டத்தை சேலம் போன்ற மாவட்டங்களிலும் அமுலாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நீர்ப் பாசனம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாம் ஒரே இலாகாவின் மேற்பார்வையின் கீழ் இருப்பதுதான் நல்லது என்பதை நானும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கிணறுகள் வெட்டுவது சம்பந்தப்பட்ட வரையில், Sub-soil water இருக்கிறதா என்று Survey செய்ய வேண்டுமென்று அமைச்சரை கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் கிணறு ஒன்று வெட்டுவதென்றால் 500 ரூபாய்க்குமேல் செலவாகிறது. சில இடங்களில் 10 ஆயிரம் ரூபாய்கூட ஆகிறது. ஆகவே எந்த இடத்தில் கிணறு வெட்டினால் நல்லது என்று சர்வே செய்ய வேண்டும். அது மாத்திரமல்லாமல் பாறைகள் இருக்கிற இடத்தில் கிணறு வெட்ட கம்பிரசர் செட்டுகள் போன்ற வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு வசதிகள் செய்தால், கிணறு வெட்ட துரிதமாகவும் சல்லிசாகவும் இருக்கும்.

இப்போது ஏதாவது கம்பிரசர் செட்டுகள் இருக்கின்றனவா என்றால், ஜில்லாவுக்கு ஒன்றிரண்டுதான் இருக்கின்றன. அது போதாது. பாறைகள் அதிகமாக இருக்கக்கூடிய இடத்தில், இந்த செட்டுகள் அதிகமாக கிடைக்க ஏற்பாடு செய்து தர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றும் காவேரி ஓரத்தில் இருக்கக்கூடிய ஊர்களில் நீர்ப்பாசன வசதி இல்லாதவர்கள் பம்பு செட்டு மூலமாக தண்ணீர் எடுத்துக் கொண்டால் அதை அனுமதிக்க வேண்டும். தனியாருக்கு அனுமதி கொடுப்பதைவிட, பம்பு செட்டு கோவாப்பரேடிவ் சொசைடிகள் வைத்து, அதன் மூலம் ஆற்றோரம் இருப்பவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக் குமே எந்த அளவுக்கு பம்பு செட்டுகளைக்கொண்டு நீர்ப்பாசன வசதியை பெருக்கிக் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு விரிவுபடுத்திக் கொடுத்தால் சௌகரியமாய் இருக்கும்.

சங்கரி தாலுகாவில் அச்சாம்பள்ளி ஏரி என்று ஒரு ஏரி இருக்கிறது. அதில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கக்கூடிய ஏரிகளுடன் அதைச் சேர்த்து, மற்ற ஏரிகளுக்கும் தண்ணீர் வர ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: Further discussion on the Demands will be continued from 3-30 p.m. Now we proceed to Government Bills.

12-30 p.m.

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS GRAMDAN VILLAGES (REPAYMENT OF DEBTS) AMENDMENT BILL, 1960 (L.A. BILL NO. 18 OF 1960).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'That the Madras Gramdan Villages (Repayment of Debts) Amendment Bill, 1960 (L.A. Bill No. 18 of 1960), be taken into consideration.'

28th April 1960] [Sri M. Bhaktavatsalam]

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கும். 1959-ல் இந்த மன்றத்தில் ஒரு சட்டம் செய்தோம். பூதானயக்ஞம் நடந்து கொண்டிருந்த காலத்தில் பலர் தாங்களாகவே முன் வந்து தங்கள் நிலங்களைத் தானமாகக் கொடுத்தார்கள். நிலம் இல்லாதவர்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் வழங்கினார்கள். அவ்வாறு கொடுக்கப்பட்ட நிலங்களை நிர்வகிப்பதற்காகச் சட்டம் ஒன்று கொண்டு வந்தோம். அதற்குப் பிறகு கிராம தானங்கள் வழங்கப்பட்டன. கிராம தானங்கள் வழங்கப்பட்டதில் சில பிரச்சனைகள் ஏற்பட்டன. மொத்தமாக கிராமத்திலுள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களை தானமாக வழங்கிவிட்டார்கள் சில இடங்களில். அந்தச் சமயம் அவர்களில் சிலர் கடன்பட்டிருந்தார்கள். தங்கள் நிலங்களையே தானமாக அவர்கள் வழங்கிவிட்டதினால் கடன் கொடுத்தவர்கள் பணத்திற்கு அவர்களை நெருக்கினார்கள். அந்த நிலையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது அவசியம் என்று உணர்ந்து ஒரு சட்டத்தை நிறைவேற்றினோம். கிராமதானங்கள் வழங்கிய ஊர்களில் உள்ளவர்களுக்கு கடன்கொடுத்தவர்கள் இன்னும் ஒரு வருஷத்திற்கு கடனைத் திருப்பித் தரும்படியாக அவர்களை நெருக்கக்கூடாது என்கிற முறையில் மாரடோரியம் பில் போன்று கொண்டு வந்தோம். இதுவரையில் அந்தமாதிரி கிராமதானமாக வந்தது 232. இதில் மதுரை ஜில்லாவில் மட்டும் 203 கிராமங்கள் இருக்கின்றன. நாம் ஒரு வருஷம்தான் கடனை நெருக்கி வாங்கக்கூடாது என்பதற்குச் சட்டம் கொண்டுவந்தோம். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக இந்த ஆண்டிலேயும் பருவ மழை தவறி, பயிர் ஒன்றும் விளையாமல் முன்னே இருந்ததைவிட அந்த கிராமங்களில் உள்ளவர்கள் அதிகமாகக் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. கிராமதானம் கொடுத்ததனாலேயே பாதிக்கப்பட்டது போன்ற உணர்ச்சி ஏற்படும் நிலை இருக்கிறது. ஆகையால் இன்னும் ஒரு ஆண்டு இந்த மாரடோரியத்தை நீடிக்க வேண்டும் என்பது இந்த மசோதா. இதை கனம் அங்கத்தினர்கள் யாவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இது சிறிய மசோதா. ஒரு வருஷம் கொடுத்ததை இன்னொரு வருஷம் நீடிப்பது என்பதுதான் இது.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Gramdan Villages (Repayment of Debts) Amendment Bill, 1960, (L.A. Bill No. 18 of 1960) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Gramdan Villages (Repayment of Debts) Amendment Bill, 1960 (L.A. Bill No. 18 of 1960) be passed."

The motion was put and carried and the Bill was passed.